முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்
அசல் வழக்கு எண்.149/2019

இன்று 2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஸ்ரீதர் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சந்திரமோகன் | கிராமம் | : திருப்பூர் |
| வயது | : 40 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 12-02-2026 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. 1ம் பிரதிவாதி என் தாயார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி என் மூத்த சகோதரர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியான என் தாயார் மூத்த குடிமகள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் எ.கே.பழனிச்சாமி என்றால் சரிதான். எ.கே.பழனிச்சாமிக்கு 2 பெண் மக்கள் என்றால் சரிதான். எ.கே.பழனிச்சாமிக்கு என் தாயார் ஒரு மகள், இன்னொரு மகள் சுபத்ரா என்றால் சரிதான்.

2. கடந்த 13.02.1976 ம் தேதியன்று 1ம் பிரதிவாதிக்கு அவரது தகப்பனார் நன்கு ஆடம்பரமாக சந்திரமோகன் என்பவருடன் திருமணம் செய்து வைத்தார் என்றால் எனக்கு தெரியாது. திருமணத்திற்கு பின்னிட்டு அனைத்து பண்டிகை நாட்களிலும் 1ம் பிரதிவாதியின் அப்பா நிறைய சீர் வரிசைகள் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. திருமணத்தின் பயனாக 1ம் பிரதிவாதிக்கு நானும் 2ம் பிரதிவாதியும் மகன்கள் என்றால் சரிதான். என்னுடைய பிறந்த தேதி 24.02.1983 என்றால் சரிதான்.

3. 1ம் பிரதிவாதியின் கணவர் 1ம் பிரதிவாதிக்கோ, 2ம் பிரதிவாதிக்கோ மற்றும் எனக்கோ எந்தவித அத்தியாவசிய செலவுகள், மருத்துவச் செலவுகளை செய்யவில்லை என்றால் சரியல்ல. எ.கே.பழனிச்சாமி உயிருடன் இருந்தபோது எனக்கும் 2ம் பிரதிவாதிக்கும் டி.என்.சிவசுப்பிரமணியம் என்பவரிடம் எ.கே.பழனிச்சாமி எங்கள் பெயரில் வைப்பீடு செய்தார் என்றால் சரிதான். என் பெயரில் எவ்வளவு தொகை

வைப்பீடு செய்யப்பட்டது என்றால் தேதி தெரியாது. பல ஆண்டுகளுக்கு முன்பு வைப்பீடு செய்யப்பட்டது. அது சம்பந்தமாக ஆவணங்கள் என்னிடமுள்ளதா என்றால் இல்லை. வைப்பீடு செய்த தொகையை டி.என்.சிவசுப்பிரமணியம் என்பவரிடம் இருந்து பெற்றுக் கொண்டேனோ என்றால் திரும்ப பெற்றுக் கொண்டேன்.

4. வைப்பீட்டுத் தொகையை நான் எப்போது திரும்ப பெற்றேன் என்றால் வருடம் ஞாபகமில்லை. பல வருடங்கள் ஆனதால் தகவல் எதுவும் தெரியவில்லை. 1ம் பிரதிவாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும், எனக்கும் எ.கே.பழனிச்சாமி தான் உயிருடன் இருக்கும் வரை அனைத்து செலவுகளையும் செய்து வந்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் கணவர் ஆரம்பத்தில் இருந்து 1ம் பிரதிவாதியின் தகப்பனார் சொத்துக்களை எழுதிக் கொடுக்க வற்புறுத்தி வந்தார் என்றால் சரியல்ல.

5. 1ம் பிரதிவாதியின் கணவர் 1ம் பிரதிவாதியை அவ்வாறு வற்புறுத்தி உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் செய்து வந்தார் என்றால் சரியல்ல. கொடுமைகள் தாங்காமல் 1ம் பிரதிவாதி தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தார் என்றால் சரியல்ல. கடந்த 1985ம் ஆண்டு என் தாயார் தற்கொலை செய்து கொள்ள முயன்றார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். கடந்த 03.03.2004ம் தேதியன்று போடப்பட்ட கையெழுத்து என்றால் சரிதான்.

6. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 03.03.2004 ம் தேதியன்று 1ம் பிரதிவாதி சந்திரமோகனுக்கு எழுதிக் கொடுத்த பொது அதிகார ஆவணத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஆவணத்தில் உள்ள கையொப்பம் மட்டும் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பொது அதிகார ஆவணத்தில் 1ம் சாட்சியாக சுமன் என்பவர் கையொப்பம் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. பொது அதிகார ஆவணத்தை படித்துப் பார்த்தால் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

7. 03.03.2004ல் என் வயது என்ன என்றால் 21 ஆகும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.எஸ்ஸி படித்துள்ளேன். பொது அதிகார ஆவணத்தை நான்

படித்துப் பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் படித்துப் பார்க்கவில்லை. பொது அதிகார ஆவணத்தில் உள்ள விவரங்கள் நான் தாக்கல் செய்த வழக்கை பாதிக்கும் என்பதால், நான் பொது அதிகார ஆவணத்தை படித்துப் பார்த்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 10.11.2006ம் தேதியிட்ட பொது அதிகார ரத்து ஆவணத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான்.

8. 1ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த பொது அதிகார ரத்து ஆவணத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஆவணத்தில் உள்ள கையொப்பம் மட்டும் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பொது அதிகார ரத்து பத்திரத்தின் விவரங்களை நான் படித்துப் பார்த்து தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. பொது அதிகார ரத்து ஆவணத்தில் இன்னாரென்று நிரூபித்தவர் என்ற இடத்தில் 1ம் பிரதிவாதிக்காக நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். பொது அதிகார ரத்து ஆவணத்தில் இன்னாரென்று நிரூபித்தவர் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. கடந்த 03.03.2004ம் தேதியன்று ஏற்பட்ட பொது அதிகார ஆவணத்திலும் இன்னாரென்று நிரூபித்தவர் என்ற இடத்தில் 1ம் பிரதிவாதிக்காக நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தானா என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது. பொது அதிகார ஆவணத்தில் உள்ள விவரங்கள் நான் தாக்கல் செய்த வழக்கை பாதிக்கும் என்பதால், நான் பொது அதிகார ஆவணத்தில் இன்னாரென்று நிரூபித்தவர் என்ற இடத்தில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொது அதிகார ஆவணத்தில் கையொப்பத்துடன் உள்ள விலாசம் என்னுடையது தானா என்றால் எனக்கு சந்தேகமாக உள்ளது.

10. திருப்பூர் நகரம், காமராஜ் ரோடு, எம்.எம்.ஜின்னிங் காம்பவுண்டு, பழைய கதவு எண் 470, புதிய கதவு எண் 442/பி என்ற முகவரியில் உள்ள விநாயகர் லட்சுமி டிரேடர்ஸ் என்பது என் அப்பாவின் தனிப்பட்ட நிறுவனம் என்றால் எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 03.12.2004 ம் தேதியிட்ட ஆவணம் என் தாயார் என் தகப்பனாருக்கு எழுதிக் கொடுத்த பொது அதிகார ஆவணம் என்றால் எனக்கு 42 வயதானதால் சாளேஸ்வரம் உள்ளதால் கண்ணாடி இல்லாமல் என்னால் படிக்க முடியவில்லை. மேற்கண்ட ஆவணத்தில் உள்ள விவரங்கள் நான் தாக்கல் செய்த வழக்கை பாதிக்கும் என்பதால், தற்போது தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக தாவா ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2026.02.12 15:26:31 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.